**செய்தி வெளியீட்டு எண்.77** **நாள்: 25.1.10**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான கலந்தாலோசனை

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மற்றும் மருத்துவமனைகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதியதாக உருவாக்கப்படும் மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் நேர்காணல் மற்றும் கலந்தாலோசனை செய்து உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது. இதுவரை **6009** மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஏற்கனவே இருபது கலந்தாய்வு மற்றும் ஆலோசனை கூட்டங்கள் மூலம் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது புதிதாக தோற்றுவிக்கப்பட்ட **110** அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கும், மேலும் **75** புதியதாக மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கும் வேலைவாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ள நபர்களுக்கு **21**–வது கலந்தாய்வு கூட்டம் வருகிற **28.1.2010** அன்று சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை பயிற்சி நிலையம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – **600 008**, என்ற இடத்தில் காலை **10.00** மணிக்கு நடைபெற உள்ளது. தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அன்று மாலையே பணி நியமன ஆணைகள் வழங்கப்படும். நியமன ஆணைகள் பெற்றவர்கள் **15** தினங்களில் பணியில் சேர வேண்டும்.

வேலைவாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளோரின் பட்டியல் பற்றிய விவரங்களை **www.tnhealth.org** எனும் இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். பட்டியலில் உள்ளவர்களுக்கு தபால் மூலமும் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்த விவரங்களை மேலே குறிப்பிட்டுள்ள இணைய தளத்திலும் தெரிந்து கொள்ளலாம். மேலும் வேலைவாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ள பட்டியலில் உள்ளவர்கள் மட்டும் கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டுமென இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மற்றவர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வி.கு. சுப்புராஜ்
முதன்மை செயலாளர்
மக்கள் நல்வாழ்வுத் துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**